07.07.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மதுரை மாவட்ட முதல்போக நெல்சாகுபடிக்கு பெரியாறில் ஜூலை 15இல் தண்ணீர் திறப்பு: விவசாயிகளிடம் பொதுப்பணித் துறையினர் உறுதி**

பெரியாறு பாசனத் திட்டத்தில் மதுரை மாவட்டத்தின் முதல் போக நெல்சாகுபடிக்கு ஜூலை 15 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று விவசாயிகளிடம் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திங்கள்கிழமை உறுதியளித்துள்ளார்.

பெரியாறு பாசனத் திட்டத்தில் பேரணை முதல் கள்ளந்திரி வரையிலான இருபோக நெல் சாகுபடி பகுதியில் 45 ஆயிரம் ஏக்கர் உள்ளன. இப்பகுதியின் முதல்போகத்துக்கு ஜூன் முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். அரசு உத்தரவின்படி பெரியாறு - வைகை அணைகளின் நீர்இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கன அடியைத் தாண்டியதும் முதல்போக பகுதிக்குத் தண்ணீர் திறக்கலாம்.

அண்மையில் நல்ல மழை பெய்து வருவதால் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. ஆகவே, மதுரை மாவட்டத்தின் முதல் போகத்துக்குத் தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதுதொடர்பாக ஆட்சியர் எல்.சுப்பிரமணியனிடம் விவசாயிகள் மனு அளித்தனர். ஜூலை முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்படும் என்று கூறியதையடுத்து, நெல் சாகுபடிக்கான பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். தற்போது பெரியாறு - வைகை அணைகளின் நீர்இருப்பு 5 ஆயிரம் மில்லியன் கன அடியைத்

தாண்டிய நிலையில், பாசனத்துக்குத் தண்ணீர் திறப்பது குறித்த அறிவிப்பு வரவில்லை. அதையடுத்து பெரியாறு பாசனத் திட்டக் குழுத் தலைவர் எம்.முருகன், உறுப்பினர்கள் திருப்பதி, முருகன் மற்றும் வாடிப்பட்டி, சோழவந்தான் பகுதி விவசாயிகள் மதுரையிலுள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தை திங்கள்கிழமை முற்றுகையிட்டனர்.

இதைத் தொடர்ந்து, பெரியாறு-வைகை வடிநில வட்ட செயற்பொறியாளர் மா.முத்துப்பாண்டியன் கூறுகையில், முதல்போக சாகுபடிக்கு ஜூலை 15 ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் தண்ணீர் திறப்பது உறுதி,என்றார்.

**100 ஆண்டுகளுக்கு பிறகு சென்னையில் 105 டிகிரி வெயில்**



தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை தொடங்கிய போதும் வெயிலின் தாக்கம் இன்னும் குறையவில்லை. சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி உள்ளிட்ட பெரும்பாலான மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக வெயிலின் அளவு அதிகளவில் இருக்கிறது.

சென்னை, புதுச்சேரியில் 105 டிகிரி வெயிலை தொட்டது. ஜூலை மாதத்தில் நூறு வருடங்களுக்குப் பின் 105 டிகிரி வெயில் அடித்தது

என்பது குறிப்பிடத்தக்கது. தென் கடலோர மாவட்டங்கள் தவிர, தமிழகத்தின் பிற பகுதிகளில் இரண்டு முதல் மூன்று டிகிரி கூடுதலாக வெயில் பதிவாகும் என்றும், சென்னை மாநகரில் அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரியாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் அதிகபட்சமாக 105 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவாகியுள்ளது. அண்டை மாநிலமான புதுச்சேரியிலும், 105 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவானது. கடலூர், மதுரை, நாகப்பட்டினம், திருச்சி, தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களில் 100 டிகிரிக்கும் மேல் வெயில் பதிவானது. திங்கள்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்):

புதுச்சேரி 105

சென்னை நுங்கம்பாக்கம் 105

மீனம்பாக்கம் 105

கடலூர் 104

மதுரை, அதிராம்பட்டினம் 102

வேலூர், திருச்சி, நாகை, காரைக்கால் 101

தூத்துக்குடி 100

பாளையங்கோட்டை 99

சேலம், கரூர் பரமத்தி 98

தொண்டி, தருமபுரி 97

**தோட்டப் பயிர் மானிய உதவி சிறப்பு முகாம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தோட்டப் பயிர் சாகுபடி மானிய உதவிக்கு விண்ணப்பங்கள் பெறும் முகாம், அறிவிக்கப்பட்ட தேதியை விடுத்து முன்கூடியே நடத்தப்பட்டதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர்.

தேனி மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறை மூலம் தேசிய தோட்டக் கலை இயக்கம், சொட்டுநீர் பாசனம், மானாவாரி தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய மூலிகைப் பயிர் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் கீழ் தோட்டப் பயிர் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் அரசு மானிய உதவி பெறுவதற்கு அனைத்து வட்டாரங்களிலும் உள்ள தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் ஜூலை 5ஆம் தேதி விண்ணப்பங்கள் பெறுவதற்கு சிறப்பு முகாம் நடைபெறும் என்று மாவட்ட தோட்டக் கலைத் துறை சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், அறிவிக்கப்பட்ட தேதியை விடுத்து முன்கூட்டியே வெள்ளிக்கிழமை(ஜூலை 3) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில், தோட்டப் பயிர் சாகுபடி விவசாயிகளிடமிருந்து மானிய உதவிகளுக்கான விண்ணப்பங்கள் பெறும் சிறப்பு முகாம் நடைபெற்றது. மாற்று அறிவிப்பு ஏதுமின்றி, தோட்டக் கலைத் துறையில் அரசு மானிய உதவி பெறுவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்திருந்த விவசாயிகளைக் கொண்டு இம்முகாம் நடைபெற்றதால், முகாமில் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாத விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். இது குறித்து மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் சின்னராஜிடம் கேட்டதற்கு, தோட்டக் கலைத் துறை திட்டங்களின் கீழ் மானிய உதவி பெறுவதற்கு விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற முகாம் நடத்தி, ஜூலை 5-ம் தேதிக்குள் அறிக்கை அனுப்ப அரசு உத்தரவிட்டிருந்து. ஜூலை 5ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதை அறியாமல் அன்றைய தினம் முகாம் நடைபெறுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டு விட்டது. ஆட்சியர்

அலுவலகத்தில் நடைபெற்ற முகாமில் மொத்தம் 104 விவசாயிகள் மானிய உதவி கோரி மனு அளித்துள்ளனர் என்றார்.

**கோத்தகிரியில் விவசாயிகளுக்கான விண்ணப்ப மேளா**

கோத்தகிரி உபகோட்டம் தோட்டக்கலைத்துறை சார்பில், விவசாயிகளுக்கான விண்ணப்ப மேளா திங்கள்கிழமை நடைபெற்றது.

தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, கோத்தகிரி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் டீ.பீமன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் மனோகரன் மற்றும் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சிவாசுப்பிரமணி, சாம் ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி இயக்குநர் ஜீ.கே.உமாராணி வரவேற்றார்.

இதில், உதகை தோட்டக்கலை இணை இயக்குநர் என்.மணி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று நுண்ணீர் பாசனத் திட்டம், இந்திய ஜெர்மானியத் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் குறித்து விளக்கம் அளித்தார். தொடர்ந்து, விவசாயிகளுக்கு விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் சித்ரபானு, ரமேஷ், ராமன், மணி, பாபு, கோபாலன் உள்ளிட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**தோட்டத் தொழிலாளர்களுக்கு வங்கி மூலம் ஊதியம் வழங்கும் திட்டம் ரத்து**

வால்பாறையை அடுத்த சின்கோனா எஸ்டேட் தொழிலாளர்களுக்கு வங்கி மூலம் மாத ஊதியம் வழங்கும் திட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

வால்பாறை பகுதியில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. லாசன், ரயான் என இரண்டு கோட்டங்களாக உள்ள இந்த தேயிலைத் தோட்டங்களில் சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்தத் தொழிலாளர்களுக்கு நேரில் வழங்கப்பட்டு வந்த மாத ஊதியத்தை, கடந்த ஜூன் மாதம் தோட்ட நிர்வாகத்தினர் வங்கியில் செலுத்தினர். இதற்கு தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து இம்முறையை மாற்றக் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, வால்பாறை சட்டப்பேரவை உறுப்பினர் மா.ஆறுமுகம், நகர கூட்டுறவு வங்கித் தலைவர் வி.அமீது ஆகியோர் இப்பிரச்னை தொடர்பாக சென்னையில் உள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அதில், வரும் மாதம் முதல் தொழிலாளர்களுக்கு நேரில் மாத ஊதியம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

## சாகுபடி செய்யும் நிலத்திற்கு பட்டா வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்

பல ஆண்டுகளாக சாகுபடி செய்துவரும் நிலத்திற்கு பட்டா வழங்கக் கோரி, விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தனிடம் மனு அளித்தனர்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை மக்கள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், பென்னாகரம் வட்டம் ரங்காபுரம் அருகேயுள்ள காட்டுநாயக்கனஅள்ளி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அளித்த மனு விவரம்: பென்னாகரம் வட்டத்துக்குள்பட்ட காட்டுநாயக்கனஅள்ளி சின்ன பூம்பள்ளம் என்ற இடத்தில் உள்ள 23 ஏக்கர் நிலத்தை பல ஆண்டுகளாக அதே பகுதியைச் சேர்ந்த நிலமற்ற 22 விவசாய குடும்பத்தினர் சாகுபடி செய்து வருகிறோம். மேலும், அந்த நிலத்தில் வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறோம்.

இந்த நிலையில், பென்னாகரம் பேரூராட்சிக்குள்பட்ட கோடியூரைச் சேர்ந்த சிலர், அந்த நிலம் தங்களுக்குச் சொந்தம் எனக் கூறி எங்களை வெளியேற்ற முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்த நிலத்திற்கான பட்டா வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலத்தை ஒதுக்கீடு செய்ய வலியுறுத்தல்: தருமபுரி அருகே தடங்கம் பகுதியைச் சேர்ந்த தலித் மக்கள், தங்களுக்கு கடந்த 29.01.2002-இல் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா 42 பேருக்கு வழங்கப்பட்டது. இந்த நிலத்தை கடந்த மே மாதம் 4-ஆம் தேதி அளவீடு செய்யப்பட்டது. எனினும், பயனாளிகளுக்கு பட்டா வழங்கிய நிலம் சரிவர அடையாளம் காட்டப்படாததால் அங்கு குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் பயனாளிகளுக்கு உரிய நிலத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளனர்.

எஸ்.ஐ. மீது நடவடிக்கைக் கோரி மனு: கடத்தூர் அருகே சில்லாரஅள்ளியைச் சேர்ந்த மூதாட்டி மங்கை (85) என்பவர் நிலப் பிரச்னைத் தொடர்பாக கடத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்ற தனது உறவினர்களான மாது, வேலன், காளியப்பன் ஆகியோரை விசாரணை என்ற பெயரில் கடத்தூர் காவல் உதவி ஆய்வாளர் ஒருவர் தாக்கினர். இதில் காயமடைந்தவர்கள் தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, உறவினர்களைத் தாக்கிக் காயப்படுத்திய காவல் உதவி ஆய்வாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி மனு அளித்தார்.

இதே போல, நல்லம்பள்ளி அருகே முண்டாசு புறவடையில் உள்ள திருநங்கைகள் குடும்ப அட்டை வழங்கக் கோரி மனு அளித்தனர். மேலும், தருமபுரி நியூ காலனியில் பழுதடைந்த சாலையை சீரமைத்து, அந்தப்

பகுதிக்கு ஒகேனக்கல் குடிநீர் வழங்கக்கோரி அந்தப் பகுதியினர் மனு அளித்தனர். ஓய்வூதியத்தொகை, வங்கிக் கடன், சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 410 மனுக்கள் ஆட்சியரிடம் அளிக்கப்பட்டன.

**அக்கரைப்பட்டியில் ரூ.10 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

ராசிபுரம் அருகேயுள்ள அக்கரைப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில், திங்கள்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 581 மூட்டை பருத்தி ரூ.10 லட்ச ரூபாய்க்கு ஏலம் போனது.

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு உள்பட்ட அக்கரைப்பட்டி தொடக்கக் கூட்டுறவு வங்கி ஏல மையத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில், 60 கிலோ கொண்ட 581 சுரபி ரக பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டன. இதில், பருத்தி ஒரு குவிண்டாலுக்கு ரூ.4,800 முதல் அதிகபட்ச விலையாக ரூ.5,452 ரூபாய் வரை விற்பனையானது.

**விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்**

தேசிய, கூட்டுறவு வங்கிகளில் பெற்ற விவசாயக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் (எஸ்.ஏ.சின்னசாமி) வலியுறுத்தியுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கிருஷ்ணகிரியில் உழவர் தின விவசாயிகள் பேரணி, மாநாடு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமையில் கிருஷ்ணகிரி அண்ணா சிலை எதிரில் தொடங்கிய பேரணி, டி.பி. சாலை, காந்தி சிலை, காந்தி சாலை, வட்டச்சாலை வழியாக கார்னேசன் திடலை அடைந்தது. இந்தப் பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

சட்டப் பேரவைத் தேர்தலின் போது தமிழக முதல்வர் அளித்த வாக்குறுதியின்படி மறைந்த நாராயணசாமி நாயுடுவுக்கு மணிமண்டபம்

கோவையில் அமைக்க வேண்டும். விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்கவும் விவசாயத்தைக் காக்கவும் தேசிய, கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்யவும் வேண்டும். காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புப்படி காவிரி மேலாண்மை ஆணையமும் காவிரி கண்காணிப்புக் குழுவும் காலதாமதமின்றி அமைத்து, தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீரை கர்நாடகா வழங்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டிவரும் ஆந்திர மாநில அரசின் நடவடிக்கையையும், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னையில் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகச் செயல்படும் கேரள மாநில அரசின் நடவடிக்கைகளை மத்திய அரசு தடுத்திடவும் வேண்டும். முல்லைப் பெரியாறு, தேக்கடி அணைகளுக்கு மத்திய காவல் படை பாதுகாப்பு அளிக்க வேண்டும். தென்பெண்ணை - பாலாறு இணைப்புத் திட்டத்தை பழைய வழித்தடத்தில் நிறைவேற்ற வேண்டும். தேசிய நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் முதல் கட்டமாக தென்னக நதிகள் இணைப்புக்கான பணியைத் தொடங்க வேண்டும்.

விவசாயத்துக்குத் தனி நிதிநிலை அறிக்கை தயாரிக்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் சிப்காட் தொழிற்பேட்டைக்கு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவு விளை நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் சட்ட பேரவைக் கூட்டத்தொடரின் போது கோட்டை முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது, மாவட்டத் தலைநகரங்களில் மத்திய அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட மொத்தம் 33 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநில பொதுச் செயலர் சுந்தரம், துணை பொதுச் செயலர் ராஜசிதம்பரம், பொருளாளர் வேல்மணி, பிரசாரக் குழுச் செயலர் உழவன்பாரதி, மாநில துணைத் தலைவர்கள் பாண்டியன், ஆறுமுகம், செயலர் லட்சுமணபெருமாள், மாவட்டத் தலைவர்கள் பி.ஸ்ரீராம்ரெட்டி, பி.ஆர்.செங்கோடன், செயலர்கள் எ.சென்னையநாயுடு, கே.சக்திவேல்,

பொருளர்கள் பழனி, ஆர்.முனிரத்தினம், முன்னாள் மாவட்டச் செயலர் கே.வி.சின்னசாமி, டிராக்டர் விவசாயிகள் சங்கத் தலைவர் எம்.எஸ்.மகாராஜன் உள்ளிட்டோர் மாநாட்டில் பங்கேற்றனர்.

**ஏற்காட்டில் பலாப்பழ விளைச்சல் அதிகரிப்பு**

ஏற்காட்டில் பலாப்பழ விளைச்சல் அதிகரித்துள்ளது.

ஏற்காடு, குண்டூர், அசம்பூர், மஞ்சக்குடை, வழவந்தி, கீரைக்காடு, செங்காடு, தலைச்சோலை, காக்கம்பாடி, நாகலூர், பட்டிப்பாடி, வேலூர், செம்மநத்தம், கரடியூர் கிராமப் பகுதிகளில் அதிகமாக பலாப்பழங்கள் விளைகின்றன. தற்போது பலாப் பழம் ஏற்காடு சந்தையில் மற்றும் பழக்கடைகளில் கிடைக்கிறது. இதன் விலை ரூ.50 முதல் ரூ.150 வரை விற்பனை செய்வதாக பழங்கள் விற்பனையாளர் ராமு தெரிவித்தார்.

ஏற்காடு வரும் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் பலாப்பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

**"உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பயனாளிக்கு ரூ.1.02 லட்சம் இழப்பீடு**

புதுக்கோட்டையில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைகேட்பு முகாமில் உழவர் பாதுகாப்புத் திட்டப் பயனாளிக்கு விபத்து நிவாரண இழப்பீடுத் தொகையாக ரூ. 1.02 லட்சம் வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற முகாமுக்கு ஆட்சியர் சு. கணேஷ் தலைமை வகித்தார்.

இதில் பட்டா மாறுதலுக்காக 73 பேர், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகைக்காக 57 பேர், இலவச பசுமை வீடு கேட்டு 28, புதிய குடும்ப அட்டை வேண்டி 23, வேலைவாய்ப்பு கேட்டு 14, காவல்துறை நடவடிக்கை வேண்டி 12, இதரக் கோரிக்கைகளுக்காக 98 பேர் அளித்த மனுக்கள் உள்பட

மொத்தம் 305 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ. 1,02,500 மதிப்பில் விபத்து நிவாராண நிதி உதவித் தொகைக்கான காசோலையும், 1 பயனாளிக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாவும் வழங்கப்பட்டது.

இதில், மாவட்ட வருவாய் அலுவலர் சு. மாரிமுத்து, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராமசாமி, நில அளவைத் துறை உதவி இயக்குநர் சுப்பிரமணியம் நோட்டம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**நிகழாண்டுக்கான உணவு உற்பத்தி இலக்கு 145 லட்சம் மெட்ரிக் டன்: அமைச்சர்**

நிகழாண்டுக்கான உணவு உற்பத்தி இலக்கு 145 லட்சம் மெட்ரிக் டன் என்றார் வீட்டுவசதி, நகர்புற வளர்ச்சி துறை மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம் அரசப்பட்டு கிராமத்தில் குறுவை சாகுபடி தொகுப்பு உதவி திட்டத்தின் கீழ் சாகுபடி பணிகளுக்கான நலத் திட்ட உதவிகள், சாகுபடி முன்னேற்பாட்டுப் பணிகளை ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் தொடங்கி வைத்துப் பேசியது:

டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை சாகுபடி மேற்கொள்ள வசதியாக 12 மணி நேரம் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. குறுவை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவையை பயன்படுத்தும் விதமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 315 வீதம் அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 200 கிலோ வீதம் 210 மெட்ரிக் டன் விலையில்லா ஜிப்சம் 810 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா இயந்திர நடவு செய்திட 40 ஆயிரம் ஏக்கருக்கு இலக்கு அளிக்கப்பட்டு ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 103 ஏக்கர் பாய் நாற்றங்கால் அமைத்து 6,558 ஏக்கர் பரப்பில் இயந்திர நடவு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. 2013-14ல் 110 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்ததற்காக தமிழகத்துக்கு மத்திய அரசின் கிரிஷி கர்மான் விருது கிடைத்தது. நடப்பாண்டுக்கான உணவு உற்பத்தி இலக்கு 145 லட்சம் மெட்ரிக் டன் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றத்துக்கு ஏற்ப விவசாயிகள் தங்களை தயார் செய்து இயந்திரங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும் என்றார். தொடர்ந்து ஒரத்தநாடு வட்டாரத்தில் அரசப்பட்டு கிராமத்தில் த. கிருஷ்ணமூர்த்தி என்பவரது வயலில் 10 ஏக்கர் பரப்பளவில் இயந்திர நடவு செய்யும் பணியை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

மேலும் ஒரத்தநாடு வட்டத்தில் 100 பயனாளிகளுக்கு ரூ. 60 ஆயிரம் மதிப்பிலான 20 மெட்ரிக் டன் ஜிப்சம் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன், மக்களவை உறுப்பினர் கு. பரசுராமன், மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் துரைதிருஞானம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பேச்சிப்பாறை அணையின் மறுகால் மதகுகள் மூடல் இன்று விவசாயத்துக்காக கால்வாயில் நீர் திறப்பு**

குமரி மாவட்டத்தில் மழை தணிந்து அணைகளுக்கு தண்ணீர் வரத்து கணிசமான அளவில் குறைந்ததையடுத்து பேச்சிப்பாறை அணையின் மறுகால் மதகுகள் திங்கள்கிழமை மூடப்பட்டு, உபரி தண்ணீர் வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட்டது. பேச்சிப்பாறை அணையின் கால்வாய் செவ்வாய்க்கிழமை திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த வாரம் வரை தொடர்ந்து பெய்து வந்த மழை, தற்போது தணிந்து கடும் வெயில் நிலவுகிறது. மழையின் காரணமாக நிரம்பிய அணைகளிலிருந்து உபரி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில், மழை தணிந்து அணைகளுக்கு உள்வரத்து தண்ணீரின் அளவு குறைந்ததால் அனைத்து அணைகளிலிருந்தும் உபரி தண்ணீர் வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதில் பேச்சிப்பாறை அணையிலிருந்து உபரி தண்ணீர் வெளியேற்றப்படுவது திங்கள்கிழமை காலையில் நிறுத்தப்பட்டது. அணைக்கு விநாடிக்கு 230 கன அடி வரை தண்ணீர் உள்வரத்தாக வந்து கொண்டிருந்த நிலையில், திங்கள்கிழமை இரவில் அணையின் நீர்மட்டம் 46 அடியைத் தொட்டது.

கால்வாய் திறப்பு: மாவட்டத்தில் மழை தணிந்துள்ள நிலையில், விவசாயத்திற்காக தண்ணீர் வழங்கும் வகையில் பெருஞ்சாணி அணை கடந்த வார இறுதியில் திறக்கப்பட்டது. இந்நிலையில் பேச்சிப்பாறை அணையின் கால்வாய் செவ்வாய்க்கிழமை திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சிற்றாறு அணைகளிலிருந்து பாசனத்திற்காக கால்வாய் திறக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. சிற்றாறு அணைகளில் நீர்மட்டம் தற்போது தலா 17 அடியாக உள்ளது.

திற்பரப்பு அருவியில் தண்ணீர் குறைந்தது:பேச்சிப்பாறை அணையிலிருந்து உபரி தண்ணீர் திறக்கப்படும் நிலையில், திற்பரப்பு அருவியில் தண்ணீர் மேலும் குறைந்து இந்த அருவியில் தண்ணீர் மிதமாகக் கொட்டுகிறது. இதையடுத்து இந்த அருவியில் சுற்றுலாப் பயணிகள் அச்சமின்றி குளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**கார் சாகுபடிக்கு கூடுதல் தண்ணீர் திறக்கக் கோரி ஆட்சியரிடம் மனு**

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் கார் சாகுபடிக்கு அணைகளிலிருந்து கூடுதலாக தண்ணீர் திறக்கக் கோரி

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தின்போது, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் கே.பி. பெருமாள் தலைமையில் ஆட்சியரிடம் அளிக்கப்பட்ட மனு விவரம்:

ஸ்ரீவைகுண்டம் பகுதியில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் நெல், வாழை, வெற்றிலை உள்ளிட்ட விவசாயப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது அறுவடைக்கு தயாராகும் சூழ்நிலையில் தண்ணீர் இல்லாததால் வாழை மரங்கள் வாடும் நிலையில் உள்ளன.

கடந்த மாதம் 18 ஆம் தேதி கார் சாகுபடிக்காக பாபநாசம் அணையிலிருந்து 1200 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் முன்கார் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடாத நிலையில் தற்போது கார் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது போதுமானதாக இல்லை. அணையிலிருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடவேண்டும். இல்லையெனில் விவசாயிகளைத் திரட்டி ஆட்சியர் அலுவலகத்தில் முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்படும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டு கண்காணிப்புக் குழு தேவை: தூத்துக்குடி மாவட்ட தாமிரவருணி நதிநீர் பாதுகாப்புப் பேரவை அமைப்பாளர் நயினார் குலசேகரன், நிர்வாகி பாரதிமுருகன் ஆகியோர் ஆட்சியரிடம் அளித்த மனுவில்,

ஸ்ரீவைகுண்டம் அணை தூர்வாரும் பணியில் தவறுகள் நடக்காமல் இருக்க கண்காணிப்பு அவசியம். எனவே, அதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கொண்ட கண்காணிப்புக்குழு உடனடியாக அமைக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்குவாரி பணியை நிறுத்தக் கோரிக்கை: மேலத்தட்டப்பாறையைச் சேர்ந்த காசிபெருமாள் அளித்த மனு விவரம்:

மேலத்தட்டப்பாறையில் உள்ள கல்குவாரி விதிமுறையை மீறி செயல்படுவதாக அளித்த புகாரின்பேரில் கல்குவாரியின் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டதோடு பணிகள் நிறுத்தப்பட்டன. ஆனால், தற்போது வேறு ஒருவர் பெயரை முன்னிறுத்தி பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அதே பகுதியில் எங்களுக்கு சொந்தமான இடத்திலிருந்தும் சிலர் கல்குவாரிகளை அனுமதியின்றி நடத்தி வருகின்றனர்.

எனவே, சார் ஆட்சியரால் அபராதத் தொகை விதிக்கப்பட்டு பணிகள் நிறுத்தப்பட்ட கல்குவாரியில் அதிகாரிகள் ஆய்வுகள் மேற்கொண்டு அங்கு நடைபெற்று வரும் பணிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

## ரூ.41 கோடி குறுவை தொகுப்பு திட்டம் ஒரு வாரத்திற்குள் முடிக்க அரசு கெடு

'குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தை, ஒரு வாரத்திற்குள் முடிக்க வேண்டும்' என, மாவட்ட வேளாண் துறை அதிகாரிகளுக்கு உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டு உள்ளது. டெல்டா மாவட்டங்களில், நிலத்தடி நீராதாரங்களைப் பயன்படுத்தி, குறுவை சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, 41 கோடி ரூபாய் மதிப்பிலான, குறுவை தொகுப்புத் திட்டத்தை, கடந்த மாதம், 4ம் தேதி, முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

அதன்படி,

* நிலங்களில், 25 கோடி ரூபாய் செலவில், இலவச இயந்திர நடவுப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும். * நெல் நுண்ணூட்ட கலவை மற்றும் உயிர் உரங்கள் வாங்க, ஏக்கருக்கு, 315 ரூபாய் வழங்கப்படும். இதற்காக, 7.87 கோடி ரூபாயை அரசு செலவிடுகிறது.

* விவசாயிகள் வங்கிக் கணக்கில், இந்தப் பணத்தை நேரடியாக செலுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது. இத்துடன், 50 ஆயிரம் ஏக்கரில், மண்வளத்தைப் பாதுகாக்க, 3 கோடி ரூபாய் செலவில், ஜிப்சம் வழங்கப்படும்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலால், கடந்த ஒரு மாதமாகக் குறுவை தொகுப்புத் திட்டம் துவங்கவில்லை. மாவட்ட வேளாண் துறை அதிகாரிகள், பயனாளிகள் தேர்வில் கவனம் செலுத்தி வந்தனர்.

தற்போது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணி முடுக்கி விடப்பட்டு உள்ளது. ஒரு வாரத்திற்குள் முடிக்க, அரசு கெடு விதித்துள்ளது.

இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

இடுபொருட்கள் கொள்முதல், பயனாளிகள் தேர்வு உள்ளிட்ட காரணங்களால், திட்டத்தைச் செயல்படுத்துவது ஒரு மாதம் தாமதமானது. தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை, அமைச்சர்கள் துவங்கி வைத்து உள்ளனர். பிற மாவட்டங்களில், ஒரு வாரத்திற்குள் திட்டம் துவங்கப்படும். வரும் திங்கட்கிழமைக்குள் வேளாண் துறை இயக்குனரத்திற்குத் தகவல் அனுப்ப வேண்டும் என, அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

**பிரான்சின் திராட்சை தோட்டம் உலக பாரம்பரிய சின்னம்**




பாரிஸ்:

'ஷாம்பெய்ன்' என்ற மது பானம் தயாரிக்கும் பிரான்சின் திராட்சை தோட்டத்தை, உலக பாரம்பரிய சின்னமாக, யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

சுற்றுலா பயணிகள், அதிகம் விரும்பிச் செல்லும் நாடான பிரான்சில், கடந்த ஆண்டு மட்டும், 84 லட்சம் பயணிகள் வந்துள்ளனர். இங்கே, 17ம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே, ஷாம்பெய்ன் தயாரிப்பு முறை வளர்ச்சியடைந்தாலும், 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் இது, தொழில்மயமாக்கப்பட்டது. இந்நாட்டில் தயாரிக்கப்படும் ஷாம்பெய்ன், உலகம் முழுக்க அதிகளவில் விற்பனையாகிறது.

ஜெர்மனியின், பான் நகரில் நடந்த யுனெஸ்கோ கலாசார பிரிவின் கூட்டத்தில், பிரெஞ்சு ஷாம்பெய்ன் தயாரிப்புக்கான திராட்சை தோட்டம், உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே, உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில், பெரு நாட்டின் மச்சு பிச்சு, இந்தியாவின் தாஜ்மஹால் மற்றும் சீனப்பெருஞ்சுவர் இடம்பெற்றுள்ளன.

## சரிவில் கொப்பரை விலை கன்னத்தில் கை, மத்திய அரசிடம் எதிர்பார்ப்பு

பொள்ளாச்சி: கொப்பரை விலை, தொடர்ந்து சரிந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மத்திய அரசு, விலையை நிர்ணயிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப் பகுதிகளில், தென்னை சாகுபடி பிரபலம். இப்பகுதியில் இருந்து உள்ளூர் மட்டுமின்றி, வெளியூர், வெளி மாநிலங்களுக்கும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நல்ல விலையில் விற்பனை செய்யப்பட்ட கொப்பரை, சில மாதங்களாக விலை சரிவை சந்தித்தது. விலை உயரும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. சில நாட்களாக தொடர் மழை பெய்ததால், கொப்பரையை உலர வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், காங்கேயம், வெள்ளக்கோவில் பகுதிக்கு, பலர் படையெடுக்க துவங்கினர்.

காங்கேயம் மார்க்கெட் நேற்றைய நிலவரப்படி, கடந்த வாரம் கிலோவுக்கு, 75க்கு விற்பனை செய்யப்பட்ட முதல் தர கொப்பரை, தற்போது 65 ரூபாய்க்கும், இரண்டாம் தரம் 62-63க்கும், விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரம், ஒரு டன் முதல் தர தேங்காய், 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிய நிலையில், நேற்று 18 ஆயிரத்து 500 ரூபாயாகவும், இரண்டாம் தர தேங்காய், 19 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், நேற்று, 17 ஆயிரம் ரூபாய்க்கும் குறைந்தது. 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பவுடர் விலை 96 ஆக குறைந்தது.

முதல் தரம் ஒரு டின் எண்ணெய், 1,440 ஆகவும், இரண்டாம் தரம் 1,350 ஆகவும் குறைந்தது. தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலச்சங்க பிரதிநிதி தங்கவேலு கூறியதாவது: இரு ஆண்டுகளுக்கு முன், போதிய மழை இல்லாததால், கொப்பரை மற்றும் தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தென்னை சாகுபடி செய்த விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டது. கடந்தாண்டு பெய்த மழையால், மரங்கள், மீண்டும் உயிர் பெற்றன. எனினும், வரத்து அதிகரிப்பால், கொப்பரை மற்றும் தேங்காய் விலை சரிந்து வருகிறது.

காங்கேயம் மார்க்கெட்டுக்கு, வியாபாரிகள் அதிகளவு கொப்பரை மற்றும் தேங்காய் விற்பனை செய்ய படையெடுக்கின்றனர். இதைப் பயன்படுத்திக் கொள்ளும் எண்ணெய் நிறுவனங்கள், விலை குறைக்கும் சம்பவங்களும் அரங்கேறுகின்றன. ஆனால், நுகர்வோர் வாங்கும் எண்ணெயின் விலை மட்டும் குறையவில்லை. இதனால், தென்னை விவசாயிகள், நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது. மத்திய அரசு, கடந்த 2009-10ல், கொப்பரை கிலோவுக்கு, 44.50 ரூபாய், 2012ல், 51 ரூபாய்

என நிர்ணயித்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக, விலையை நிர்ணயிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருதி, கிலோ கொப்பரைக்கு 75 ரூபாய் நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால், விவசாயிகள் நஷ்டத்தை சந்திப்பதை தவிர வேறு வழியில்லை. இவ்வாறு, தங்கவேலு கூறினார்.

## தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்ட வசூல் இலக்கு ரூ.99 லட்சம், விவசாயிகளுக்கு 55 சதவீத மானியம் வழங்கி ஊக்குவிப்பு

வாலாஜாபாத்: தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நடப்பாண்டிற்கு, 10 ஆயிரம் விவசாயிகளுக்கு, பயிர் காப்பீடு செய்ய, அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இத்திட்டத்திற்கு, 55 சதவீதம் வரை, காப்பீட்டு தொகையை, அரசு மானியமாக செலுத்தி, விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1.48 லட்சம் ஏக்கரில் நெல்லும், 25,490 ஏக்கரில் வேர்க்கடலையும், 10.139 ஏக்கரில் பயறு வகை பயிர்களும், கடந்த ஆண்டு பயிரிடப்பட்டதாக, வேளாண் துறை

தெரிவித்து உள்ளது. இதில், ஏப்ரல் மாதம் துவங்கி, ஆகஸ்டு மாதம் முடிய, சொர்ணவாரி பருவத்திற்கும், ஆகஸ்டு மாதம் துவங்கி, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 15ம் தேதி முடிய, சம்பா பருவங்களில், 55 சதவீத நிலப்பரப்பில் மட்டுமே, விவசாயிகள் நெல்

பயிரிடப்படுவதாக, வேளாண் துறை தெரிவிக்கிறது.

**வறட்சியால் பாதிப்பு**

இந்த பருவத்தில், நெற்பயிர்கள் வறட்சி மற்றும் இயற்கை சீற்றங்களில் ஏற்படும் சேத பாதிப்பை தவிர்ப்பதற்கு, தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டம், ஆண்டுதோறும் வேளாண் துறை செயல்

படுத்தி வருகிறது. அந்த வரிசையில், கடந்த ஆண்டு, 10,454 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள்; 379 ஏக்கரில் கரும்பு பயிரிட்டுள்ள விவசாயி கள்; 74 ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள், பயிர் காப்பீடு செய்து உள்ளனர். தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், விவசாயிகள் பயன்பெற, வங்கி கடன் வாங்கும் விவசாயிகள்; வங்கி கடன் வாங்காத விவசாயி கள் என, இரு வகையாக தரம் பிரிக்கப்பட்டு பயிர் காப்பீடு செய்யப்படுகிறது. கடன் வாங்கும் விவசாயிகள், 50 சதவீதம் காப்பீட்டு தொகை செலுத்தவும்; கடன் பெறாத விவசாயிகள் 45 சதவீதம் காப்பீட்டு தொகையை செலுத்தவும், வேளாண் துறையால் அறிவுறுத்தப்படுகிறது. கடன் பெறும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் பங்களிப்பு தொகையும்; கடன் பெறாத விவசாயிகளுக்கு 55 சதவீத காப்பீட்டு தொகையை மானியமாக, வேளாண் துறை செலுத்தி, விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது.

**அவகாசம்**

இதற்காக, நடப்பாண்டிற்கு, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, வங்கி கடன் பெறும் 9,000 விவசாயிகள்; வங்கி கடன் பெறாத 1,000 விவசாயிகள் என, இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

வங்கி கடன் பெறுபவர்களுக்கு, 89,48,800 ரூபாயும்; வங்கி கடன் பெறாதவர்களுக்கு 9,94,000 ரூபாய் என, மொத்தம் 99,42,800 ரூபாய் வசூலிக்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் கூறுகையில், "நடப்பாண்டு சொர்ணவாரி மற்றும் சம்பா பருவத்திற்கு அரசு, 10 ஆயிரம் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டம் அளிக்க, இலக்கு நிர்ண யம் செய்யப்பட்டு உள்ளது," என்றார். மேலும், "அரசு அறிவித்த இலக்கை

அந்தந்த வட்டாரங்களுக்கு ஏற்றவாறு பிரித்து பகிர்ந்தளிக்கப்பட்டு உள்ளது. பயிர் காப்பீட்டு தொகை செலுத்துவதற்கு, நெல் நடவு செய்த ஒரு மாதத்திற்குள் செலுத்தவும், விவசாயிகளுக்கு அவகாசம் அளிக்கப்பட உள்ளது," என்றார்.

## பாதிக்கப்பட்ட விவசாயிக்கு ரூ. 2.54 லட்சம் நஷ்டயீடு

சேலம்:தபாலை பட்டுவாடா செய்யாமல், அலட்சிய போக்கை கையாண்ட, தி புரபொஷனல் கூரியர் நிறுவனம், பாதிக்கப்பட்ட விவசாயிக்கு, ரூ. 2.54 லட்சம் நஷ்டஈடு வழங்கும்படி, தேசிய நுகர்வோர் குறைதீர் மையம் உத்தரவிட்டு தீர்ப்பளித்துள்ளது.கெங்கவல்லி தாலுகா, வீரகனூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி கலியமூர்த்தி, 60. இவர், கடந்த 2008ல், சேலம் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதில், தனது மகனின் மருத்துவ அறிக்கை தபாலுக்கான கட்டணத்தை பெற்று கொண்டு, "தி புரபொஷனல்' என்ற தனியார் கூரியர் நிறுவனம், அந்த தபாலை பட்டுவாடா செய்யாமல், சேவை குறைபாடு செய்துவிட்டதாக என குறிப்பிட்டிருந்தார்.

பாதிக்கப்பட்ட கலியமூர்த்திக்கு, சேவைகுறைபாடு செய்த தனியார் கூரியர் நிறுவனம், நஷ்ட ஈடாக ரூ. 1.90 லட்சம் மற்றும் வழக்கு செலவாக 1,000 ரூபாய் வழங்கும்படி, 2008, ஏப்.,29ல், நீதிமன்றம் தீர்ப்பளித்தது.எனினும், நீதிமன்ற தீர்ப்பை, கூரியர் நிறுவனம் ஏற்கவில்லை. கலியமூர்த்தி, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில், மேல் முறையீடு செய்தார். இந்நிலையில், மனுதாரர் தரப்பில், சரிவர யாரும் ஆஜராகவில்லையென கூறி, 2011, ஜூன் 29ல், மனுவை தள்ளுபடி செய்து, மாநில நுகர்வோர் ஆணையம் உத்தரவிட்டது.

அதை எதிர்த்து, டெல்லியில் உள்ள தேசிய நுகர்வோர் குறைதீர் மையத்தில், மேல்முறையீடு செய்தார். விசாரணைக்கு பின், நீதிபதி குப்தா, மைய உறுப்பினர் சுரேஷ்சந்திரா ஆகியோர் பிறப்பித்த உத்தரவு:

கீழமை நீதிமன்றம் விதித்த ரூ. 1.90 லட்சம் நஷ்டஈடு தொகையை, 1,260 நாட்களாக வழங்காமல், தாமதப்படுத்தியதால், அத்தொகையை 9 சதவீத வட்டியுடன், வழக்கு செலவாக 5,000 ரூபாய் சேர்த்து, மொத்தமாக ரூ. 2.54 லட்சத்தை, வரும், 24ம் தேதிக்குள் பாதிக்கப்பட்ட கலியமூர்த்திக்குவழங்க வேண்டும் என, சேலம், கந்தம்பட்டி பைபாஸில் உள்ள கூரியர் நிறுவன பொதுமேலாளருக்கு உத்திரவிட்டு, தீர்ப்பளித்துள்ளது.

### பாசி பருப்பு வரத்து அதிகரிப்பு: மூட்டைக்கு ரூ.500 திடீர் குறைவு

ஈரோடு:பாசி பருப்பு வரத்து அதிகமானதால், திடீரென மூட்டைக்கு, 500 ரூபாய் விலை குறைந்துள்ளதாக, ஈரோடு அனைத்து வியாபாரிகள் சங்க கூட்டமைப்பு முன்னாள் இயக்குனர் சித்திரைசெல்வம் தெரிவித்தார்.
மேலும், அவர் கூறியதாவது:பாசி பருப்பு வரத்து, தற்போது அதிகரித்து வருகிறது. மூன்று மாத பயிர் என்பதால், பல விவசாயிகள், பல கால கட்டங்களில் பயிரிடுவர். கடந்த மாதங்களில், பாசி பருப்பு மற்றும் குண்டு உளுந்து என இரண்டும், விலைகளில் சில ஏற்றதாழ்வுகளுடன், 100 கிலோ மூட்டை, 10,000 ரூபாய்க்கு மேல் விலை போனது.ஆந்திராவில் இருந்து ஃபிப்., மாதமும், கர்நாடகா, மகாராஷ்டிரா என வட மாநிலங்களில் இருந்து, செப்., மாதங்களில் தமிழகத்துக்கு பாசி பயிறு இறக்குமதி ஆகும். அவை நாட்டு பருப்பு, பாலீஷ் பருப்பு என வியபாரிகள் அழைப்பர். அப்போது, தமிழகத்தில் பாசி பருப்பு தட்டுப்பாடு ஏற்படும்.

உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய ஜன., மாதம், தமிழகத்தில் கோவில்பட்டி, விருதுநகர், சங்கரன்கோவிலில் இருந்தும், ஏப்ரலில் சிதம்பரம், தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் சேலம் மாவட்டம் மேச்சேரி, மேட்டூர், ஆத்தூர், தம்மம்பட்டியில் இருந்தும், ஊடுபயிராக பயிராகும் நாமக்கல், தர்மபுரியில் இருந்தும் வரத்தாகும்.

ஈரோடு மாவட்டத்துக்கு மட்டும், தினமும், 20 டன் பாசி பருப்புகள் விற்பனைக்கு வருகிறது. கடந்த மாதம், பாசி பருப்பு, 100 கிலோ கொண்ட மூட்டை, 9,800 ரூபாய்க்கு விற்பனை செய்தனர்.

தென்மேற்கு பருவ மழையால், உள்நாட்டிலும், கர்நாடாகாவில் இருந்தும் பாசிபருப்பு வரத்து அதிகமானது. இதனால், 100 கிலோ கொண்ட மூட்டை, தற்போது, 500 ரூபாய் குறைந்து, 9,300 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.தவிர, பாசி பயறு மொத்த விலையில், 100 கிலோ கொண்ட மூட்டை, 6,800 முதல் 7,000 ரூபாய் வரையிலான விலையில் விற்பனையாகிறது. வரத்து நாளுக்கு நாள் அதிமாகி வருவதால், விலைகள் மேலும் குறைய வாய்ப்புள்ளது.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

## வேளாண் விளை பொருட்கள்:ரூ.1.15 கோடி மதிப்பில் ஏலம்

அந்தியூர்:அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு, நேற்று, அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராப்பாளையம் உட்பட மாவட்டத்தின் பல பகுதிகள் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்தும், விவசாயிகள் விற்பனைக்காக பருத்தி, தேங்காய், எள் போன்ற விளை பொருட்களை கொண்டு வந்திருந்தனர்.வேளாண் பொருள்களை வாங்கி செல்ல கோவை, அன்னூர், பொள்ளாச்சி, கொங்கனாபுரம், ஊத்தங்கரை ஆகிய பகுதியில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர்.

இந்த ஆண்டு பருத்தி சாகுபடி செய்திருந்த விவசாயிகள், மூன்றாவது முறையாக நேற்று, 7,000 மூட்டை, "பி.டி' பருத்தி ரகத்தை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். குறைந்த பட்ச விலையாக, ஒரு கிலோ, 39 முதல் அதிகபட்ச விலையாக, 43.10 ரூபாய் வரை ஏலம் கூறப்பட்டு, 1.05 கோடி ரூபாய்க்கு விற்பனையானது.தவிர, 27 ஆயிரம் தேங்காய், 3 முதல், 8.70 ரூபாய் வரை, 1.9 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரைத் தேங்காய், 100 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 55.07 முதல், 65.19 ரூபாய் வரை, 2.25 லட்சம் ரூபாய்க்கும் ஏலம் போனது.மேலும், 200 மூட்டை எள் கொண்டு வந்ததில், வெள்ளை, ரக எள் கிலோ ஒன்று, 68.69 முதல், 85.49 ரூபாய்க்கும், சிவப்பு எள், 25.77 முதல், 51.19 ரூபாய் வரையும், கருப்பு ரகம், 29.19 முதல், 48.81 ரூபாய் வரை, 6.50 லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 70 மூட்டைகள், 13.9 முதல், 13.72 ரூபாய் வரை, 91 அயிரத்துக்கும் ஏலம் போனது.

கடந்த, புதன் கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்தில், 100 மூட்டை கொண்டு வரப்பட்டிருந்தன. பச்சை கிலோ, 27.7 முதல், 30.19 ரூபாய் வரையும், காய்ந்தது, 52.61 முதல், 67 ரூபாய் வரை, 2.98 லட்சம் ரூபாய்க்கு விற்பனையாகி மொத்தம், 1 கோடியே, 14 லட்சத்து, 59 ஆயிரம் ரூபாய்க்கு வேளாண் பொருட்கள் வர்த்தகம் நடந்தது.இத்தகவலை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## ரூ.10 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்:அக்கரைப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில், நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், 581 மூட்டை, 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு உட்பட்ட, அக்கரைப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில், நேற்று பருத்தி ஏலம் நடந்தது. ஆர்.சி.எம்.எஸ்., மேலாண்

இயக்குனர் எழிலரசி தலைமை வகித்தார்.சங்கத் தலைவர் தாமோதரன், பி.ஏ.சி.பி., தலைவர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுற்று வட்டாரத்தை சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், தங்களது தோட்டத்தில் சாகுபடி செய்துள்ள பருத்தியை, அறுவடை செய்து ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.

அதில், 60 கிலோ கொண்ட, 581 சுரபி ரக பருத்தி மூட்டை ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டது. அவற்றை, திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுத்தனர்.

ஒரு மூட்டை பருத்தி அதிக பட்சம், 5,452 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 4,800 ரூபாய்க்கும் ஏலம் போனது. இந்த ஏலத்தில், 581 மூட்டைகள், 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

## சிறப்பு முகாமில் கலெக்டர் தகவல்: முருங்கையை மதிப்பு கூட்டிய பொருளாக மாற்ற நடவடிக்கை

தஞ்சாவூர்: ""முருங்கை பொடியை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்," என, கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.

தஞ்சை, நாஞ்சிக்கோட்டை சாலை உழவர் மையத்தில், தோட்ட கலைத்துறை திட்டங்களுக்கான மனுக்கள் பெறும் சிறப்பு முகாம் நடந்தது.

இதில், கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்து பேசியதாவது: மாவட்ட தோட்ட கலைத்துறை மூலம், 2015-16ம் ஆண்டில் செயல் படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய மருத்துவ பயிர்கள் இயக்கம், தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கம் (நுண்ணீர் பாசனம்) மற்றும் தேசிய மூங்கில் இயக்கம் ஆகிய திட்டங்களுக்கு, இலக்கு பெற்று,

பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். முருங்கை சாகுபடியை அதிகரித்து, முருங்கை பொடியை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பூக்கள், பழங்கள், இதர தோட்டக்கலை பயிர்கள் அதிகளவில் பயிரிட்டு லாபம் அடையலாம். தோட்டக்கலை பயிர்கள் அதிக பயிரிடும் இடங்களை கண்டறிந்து, அப்பகுதி விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களை வழங்க வேண்டும். விவசாயிகள் பயன்பெற வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரக அலுவலர்களை அணுகலாம். குறுவை சாகுபடி செய்யும், களர் நிலம் உள்ள விவசாயிகள் உற்பத்தியை பெருக்கி கொள்ள ஏதுவாக ஏக்கருக்கு, 200 கிலோ ஜிப்சம் வழங்கப்படுகிறது. களர் நிலமுள்ள விவசாயிகள், வயலில் கடைசி உழவுக்கு முன், ஒரு ஏக்கருக்கு, 200 கிலோ ஜிப்சத்தை இட்டு உழுது, பின்னர் நடவு பணி மேற்கொள்ள வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில், குறுவை சாகுபடி செய்யும் களர் நிலம் உள்ள விவசாயிகள் அனைவரும் தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலரை அணுகி பயன்பெறலாம். இவ்வாறுதெரிவித்தார்.முகாமில், வேளாண் இணை இயக்குனர் சேகர், துணை இயக்குனர் பாலகிருஷ்ணன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சொக்கலிங்கம் (வேளாண்மை), துணை இயக்குனர் கலியராஜ் (வேளாண் விற்பனை), வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் வெங்கட்ராமன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பழ வகை கண்காட்சி**

ரெட்டியார்சத்திரம்:மாங்கரைப்பிரிவு மீனாட்சி மெட்ரிக் பள்ளியில், பழ வகை கண்காட்சி நடந்தது. முதல்வர் நட்ராஜ் தலைமை வகித்தார். மீனாட்சி கல்வி அறக்கட்டளை மேலாளர் ராஜூ துவக்கி வைத்தார். பல்வேறு வகை பழங்கள், அவற்றின் பெயர்கள், பயன்கள் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

**தேவதானப்பட்டியில் மண்புழு உரம் பயன்படுத்தப்படும் மாதிரி தோட்டம்**

தேவதானப்பட்டி: தேவதானப்பட்டி பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலம் குப்பைகள் தரம்பிரிக்கப்பட்டு, மண்புழு உரம் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. மண்புழு உரமிட்ட மாதிரி காய்கறி தோட்டம் அமைத்துள்ளனர்.

தேவதானப்பட்டி பேரூராட்சியில் நாள் தோறும் சேகரமாகும் குப்பைகளை 34 துப்புரவு பணியாளர்கள் தரம் பிரித்து சேகரிக்கின்றனர். நாள்தோறும் 4 ஆயிரத்து 500 கிலோ குப்பை கிடைக்கிறது. இதனை தரம் பிரிக்கும் போது 3 ஆயிரத்து 250 கிலோ மக்கும் குப்பை கிடைக்கிறது. இப்படி கிடைக்கும் மக்கும் குப்பைகளை மூலப்பொருளாக பயன்படுத்தி மண்புளு உரம் தயாரிக்கின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் உரத்தை கோவை கிரீன் லிங்க் பரிசோதனை கூடத்தில் ஆய்வு செய்து 100 சதவீதம் பயன்படுத்தலாம் என்று சான்று பெறப்பட்டுள்ளது. மாதிரி தோட்டம்: பேரூராட்சி வளாகத்தில் 2 ஏக்கர் பரப்பளவில் மாதிரி தோட்டம் அமைத்துள்ளனர். தோட்டத்தில் இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி கத்தரி, தட்டை பயிர், வெண்டைக்காய், தக்காளி மற்றும் துளசி, பச்சிலை, தூதுவாளை, சிறியாநங்கை, பெரண்டை சாகுபடி செய்து வருகின்றனர். இந்த தோட்டத்தில் தரமான பூச்சிக் கொல்லி மருந்து பயன்படுத்தாத காய்கறிகள் கிடைத்து வருகிறது. மண்புழு உரம் விற்பனை: இங்கு உற்பத்தி செய்யப்படும் மண்புழு உரத்திற்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

ஒரு கிலோ மண்புழு உரம் 3 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தி துவங்கிய 3 மாதத்தில் 6 டன் மண்புழு உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சி தலைவர் குணசேகரன் கூறியதாவது: எங்களிடம் மண்புழு உரம் கேட்டு விவசாயிகள் முன்பதிவு செய்துள்ளனர்.

இதன் மூலம் பேரூராட்சியும் சுத்தமாக மாறி உள்ளது. விவசாயிகளுக்கு தரமான உரமும் வழங்க முடிகிறது. குப்பைகள் மூலம் உரம் தயாரிப்பதால் பேரூராட்சிக்கு வருவாய் கிடைத்து வருகிறது என்றார்.

## அரவை பணிக்காக 2,400 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது



திருவாரூர், நீடாமங் கலத்தில் இருந்து புதுக் கோட்டைக்கு அரவை பணிக்காக 2,400 டன் நெல் சரக்கு ரெயிலில் நேற்று அனுப்பப்பட் டது. நெல் அனுப்பும் பணி திருவாரூர், நீடாமங்கலத்தில் இருந்து வெளி மாவட்டங் களுக்கு அரவை பணிக்காக நெல் அனுப்பும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. நேற்று திருவாரூரில் இருந்து 1,500 டன், நீடாமங்கலம் ரெயில் நிலையத்தில் இருந்து 900 டன் என மொத்தம் 2400 டன் நெல்

புதுக்கோட்டைக்கு அரவை பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டது.திருவாரூர் ரெயில் நிலை யத்தில் நடந்த பணியை யொட்டி திருவாரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள சேமிப்பு நிலையங்களில் இருந்து நெல் மூட்டைகள் லாரிகளில் கொண்டு வரப் பட்டன.

இதைதொடர்ந்து சுமை தூக்கும் பணியாளர்கள் சரக்கு ரெயிலின் 21 பெட்டி களில் நெல் மூட்டைகளை அடுக்கி வைத்தனர். பின்னர் 1,500 டன் நெல் மூட்டை களுடன் சரக்கு ரெயில் புதுக்கோட்டை புறப் பட்டு சென்றது.

நீடாமங்கலம்

அதேபோல நீடாமங்கலத் தில் நெல் அனுப்பும் பணியை யொட்டி பாமணி மத்திய சேமிப்பு கிடங்கு, ஆதனூர், மூவாநல்லூர், அசேசம், தலை யாமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள திறந்த வெளி சேமிப்பு மையங்கள் ஆகியவற்றில் இருந்து 75 லாரிகளில் சன்ன ரக நெல் ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதை தொடர்ந்து சுமை தூக்கும் பணியாளர்கள் சரக்கு ரெயிலின் 21 பெட்டிகளில் நெல் மூட்டைகளை அடுக்கிவைத்தனர்.

புதுக்கோட்டைக்கு...

பின்னர் 900 டன் நெல் மூட்டைகளுடன் சரக்கு ரெயில் நீடாமங்கலத்தில் இருந்து புதுக்கோட்டைக்கு புறப்பட்டு சென்றது.

**விவசாயிகளின் தற்கொலையை தடுக்க உழவர்களின் பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்:**



சென்னை,

உழவர்களின் பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இரங்கல்

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியைச் சேர்ந்த மதியழகன் என்ற உழவர் கடன் சுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். இவர் குடவாசல் தெற்கு ஒன்றிய பா.ம.க. செயலாளராகவும் பணியாற்றி வந்தார். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பெரும்பாலான விவசாயிகள் மதியழகனின் நிலையில் தான் உள்ளனர்.

ஒரு பக்கம் 4 ஆண்டுகளாக நீடித்து வரும் வறட்சி, மறுபுறம் பருவம் தவறி

பெய்யும் மழையால் பயிர்கள் சேதமடைவது என விவசாயிகள் தொடர்ந்து கடன் வலையில் தள்ளப்பட்டு வருகின்றனர்.

தள்ளுபடி செய்ய வேண்டும்

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டு களில் 1,500 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ள நிலையில், இனியும் இத்தகைய நிகழ்வுகள் நடக்காமல் தடுக்க வேண்டும். இதற்காக உழவர்களின் பயிர்க்கடன் களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். அத்துடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதமும், உழவுத்தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை உதவியாக ரூ.15 ஆயிரம் வீதமும் இழப்பீடு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சி.பி.ஐ. விசாரணை

மத்தியப் பிரதேச தொழில் படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வு வாரியத்தில் நடந்த ஊழல்கள் குறித்த விசாரணையில் உதவி செய்து வந்த மருத்துவக் கல்லூரி முதல்வர் அருண்ஷர்மா மர்மமான முறையில் உயிரிழந்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இவ்வழக்கில் இதுவரை மொத்தம் 46 பேர் மர்மமான முறையில் உயிரிழந்திருப்பது திகில் படங்களில் வரும் மர்மக் காட்சிகளை மிஞ்சும் வகையில் அமைந்திருக்கிறது. மத்திய பிரதேச முதல்-மந்திரி சிவராஜ் சிங் சவுகான் பதவியேற்ற பின்னர் பல துறைகளில் அம்மாநிலம் முன்னேறியிருக்கிறது. சவுகான் மீது பெரிய அளவில் எந்தக் குற்றச்சாற்றும் இல்லை. எனினும், வியாபம் ஊழல் வழக்குப் படுகொலைகள் அவரது நிர்வாகத்திற்கு பெரும் அவப்பெயரைத் தேடித்தந்துள்ளன.

இப்புகார்களை மறுக்காமல் இதன் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளிக்கொண்டு வந்து அதன் மீது நடவடிக்கை எடுப்பதே சரியானதாக இருக்கும். எனவே, வியாபம் ஊழல் வழக்கு மட்டுமின்றி இந்த மர்மச்சாவுகள் குறித்த வழக்குகளையும் சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்க

வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.


**60 வயது விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் ஏரி, ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

திருச்சி, : 60 வயதடைந்த விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில செயற்குழு கூட்டம் மாநிலத் தலைவர் விசுவநாதன் தலைமையில் நேற்று நடந்தது. மண்ணச்சநல்லூர் ஒன்றிய தலைவர் சுப்ரமணியன் வரவேற்றார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவது: 1970, 1972 ஆகிய ஆண்டுகளில் இலவச மின்சாரம், விவசாயத்திற்கு தனி பட்ஜெட் அறிவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டு விவசாயிகள் 52 பேர் உயிரிழந்தனர், பலர் படுகாயமடைந்தனர், பலர் சிறை சென்றனர். அதனை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 5ம் தேதியை விவசாயிகள் உழவர் தினமாக அறிவித்து உயிர்நீத்த விவசாயிகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும். 60 வயதடைந்த விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் அளிக்க வேண்டும். துப்பாக்கி சூட்டில் பலியான பாதிக்கப்பட்ட 52 பேர் குடும்பத்தினரில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

அவர்களை தியாகி பட்டியலில் சேர்த்து இறந்தவர்களின் மனைவிகளுக்கு

தியாகி பென்ஷனை வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய பொருட்களுக்கு உற்பத்தி செலவை விட கூடுதலாக 50 சதவீதம் சேர்த்து கொள்முதல் விலை நிர்ணயிக்க வேண்டும் என்ற எம்.எஸ்.சுவாமிநாதன் கமிட்டியின் கோரிக்கையை ஏற்று பரிந்துரை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ரயில்வே துறையை போல விவசாய துறைக்கும் தனிப் பட்ஜெட் கொண்டு வர வேண்டும். விவசாயிகளுக்கு 100 சதவீத இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. முன்னதாக துப்பாக்கில் சூட்டில் உயிர் நீத்த 52 விவசாயிகளுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டத்தில் பல்வேறு மாவட்டத்திலிருந்து நிர்வாகிகள் பங்கேற்றனர். திருவெறும்பூர் ஒன்றியத் தலைவர் பூலாங்குடி தங்கராசு நன்றி கூறினார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 84 அடி**




மேட்டூர்: கர்நாடக மாநிலம் கபினி அணையில் இருந்து திறக்கப்படும் உபரி நீர், மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருப்பதால் அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 83.96 அடியாக இருந்தது. வினாடிக்கு 5,363

கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 46.10 டிஎம்சியாக உள்ளது.

**உணவு பொருள் கலப்படம் தடுக்க கடுமையான சட்டம் அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்**



புதுடெல்லி: உணவு பொருட்களில் கலப்படம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவுக்கு மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்குமாறு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்படுவதை தடுக்கக் கோரி வக்கீல் வினீத் தண்டா என்பவர் உச்சநீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்தார். அதில், ‘‘உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்படுவதை தடுக்க தற்போதுள்ள சட்டம் வலுவானதாக இல்லை. இதனால் உணவுப் பொருட்களில் கலப்படம் அதிகரித்து வருகிறது. அபாயத்திலிருந்து மக்களை காக்க அரசு எதுவும் செய்வதில்லை. கலப்படம் செய்யப்படும் நிறுவனங்களை மூட அரசுக்கு உத்தரவிட வேண்டும். ரசாயண கலப்பில்லாமல் சர்வதேச தரத்தில் உணவுப் பொருட்களை தயாரிக்கவும், கலப்பட பொருட்களை பறிமுதல் செய்து அழிக்க கடுமையான விதிமுறைகள் வகுக்கும்படி மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட

வேண்டும்'' என கூறியிருந்தார். இந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல் தத்து, நீதிபதிகள் அருண் குமார் மிஸ்ரா, அமித்தவா ராய் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த மனு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்கும்படி நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மர்மநோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை

ஸ்ரீபெரும்புதூர்,: குன்றத்தூர் ஒன்றியம் நடுவீரப்பட்டு ஊராட்சியில் நடுவீரப்பட்டு, தர்காஸ், அம்பேத்கர் நகர், ராம்ஜி நகர், அண்ணா நகர், காந்தி நகர், எம்ஜிஆர் நகர், எட்டையபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் கறவை மாடுக்ள வைத்து, பால் விற்பனை செய்து வருகின்றனர். அம்பேத்கர் நகரில் உள்ள முனுசாமி, ஜெயராமன் ஆகியோரது 3 மாடுகள் நேற்று திடீரென மர்ம நோயால் அடுத்தடுத்து இறந்தன. கடந்த சில மாதங்களாக மேற்கண்ட பகுதிகளை சேர்ந்த மக்களின் பராமரிப்பில் இருந்த 20 மாடுகள், மர்மநோயால் இறந்துள்ளன.

இதுபோல் ஊராட்சி முழுவதும் உள்ள 50க்கு மேற்பட்ட மாடுகளுக்கு மர்ம நோய ஏற்பட்டுள்ளது. இதனால், சோமங்கலத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையில், மாடுகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என பொதுமக்கள் கூறினர். ஆனால், மருத்துவமனை ஊழியர்கள், உங்கள் பகுதி எங்கள் எல்லையில் வரவில்லை. தர்காஸ் பகுதியில் உள்ள மருத்துவமனையில் மட்டுமே சிகிச்சை அளிக்க வேண்டும் என கூறி தட்டி கழிக்கின்றனர்.

1 கி.மீ. தூரத்தில் உள்ள சோமங்கலம் கால்நடை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்காமல், 4 கி.மீ. தூரமுள்ள தர்காஸ் பகுதியில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் அவல நிலை உள்ளது என்ற செய்தி நேற்றைய தினகரன் நாளிதழில் வெளியானது.இதையடுத்து,

கால்நடை துறை மண்டல இயக்குனர் பன்னீர்செல்வம், உதவி இயக்குனர்கள் பால்ராஜ், நாகரத்தினம், நோய் தடுப்பு பிரிவு அலுவலர் குணசங்கரன் உள்பட மருத்துவ குழுவினர், நடுவீரப்பட்டு அம்பேத்கர் நகரில் நேற்று ஆய்வு செய்தனர். நோய் தாக்கம் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. எந்தவிதமான நோய் தாக்கியுள்ளது என அறிய, கால்நடைகளின் ரத்தம், சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. 2 நாட்களில் அதற்கான தகவலை தெரிவிப்பதாக, கால்நடைகளின் உரிமையாளர்களிடம் கூறி சென்றனர்.

மண்டல இயக்குனர் பன்னீர்செல்வம், எல்லையை காரணம் காட்டி எதற்காக சிகிச்சை அளிக்காமல் விட்டீர்கள். உங்கள் மருத்துவமனைக்கு கால்நடையை கொண்டு வந்தால், உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டியது உங்கள் கடமை. அதை செய்யாமல் அலைக்கழிப்பு செய்து இருக்கிறீர்கள். இனி இதுபோல் சம்பவங்கள் நடந்தால், உங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சோமங்கலம் கால்நடை மருத்துவருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

**விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் பண்ணை வைப்பவர்களுக்கு மானியத்தில் கோழி குஞ்சுகள்**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வகையில் 2015-16ம் ஆண்டு நாட்டுக்கோழி வளர்ப்புதிட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி நாட்டுக்கோழி பண்ணை வைப்பவர்களுக்கு 250 குஞ்சுகள் வழங்கப்படும்.

இதற்கு மானிய தொகையாக ரூ.37,375 வழங்கப்படும். நாட்டுக்கோழி வளர்க்க விரும்புவோர் அருகேயுள்ள கால்நடை பராமரிப்புத்துறை உதவி

இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். இதற்காக, குடும்ப அட்டை நகலுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் பகுதியில் உள்ள வங்கி மேலாளரிடம் கடன் பெறுவதற்கான அனுமதி கடிதம் இணைக்கப்படவேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பித்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**காவிரி டெல்டாவை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் தமாகா கூட்டத்தில் தீர்மானம்**

திருத்துறைப்பூண்டி, : காவிரி டெல்டாவை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்று தமாகா கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி தமாகா செயல் வீரர்கள் கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. மாவட்ட துணை தலைவர் ஜீவானந்தம் தலைமை வகித்தார். மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆரோக்கியசாமி, பொதுக்குழு சிறப்பு அழைப்பாளர் கருணாநிதி, வட்டார தலைவர்கள் ராஜ், திருமுருகன், மாவட்ட செயலாளர்கள் சத்தியநாராயணன், மதியரசு, கோட்டூர் வட்டார தலைவர்கள் ராஜேந்திரன், எழிலரசன், முத்துப்பேட்டை வட்டார தலைவர்கள் சாமிதுரை, காந்திநாராயணன், நகர தலைவர் நடராஜ சுந்தரம், விவசாய சங்க தலைவர் சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர தலைவர் கோவிந்தசாமி வரவேற்றார்.

மாவட்ட தலைவர் தினகரன், பொது செயலாளர் கங்கை செல்லத்துரை, கொள்கை பரப்பு செயலாளர் வடுவூர் கரிகாலன், மாவட்ட இளைஞரணி தலைவர் காமராஜ், பொதுக்குழு உறுப்பினர் சிங்குபாண்டியன், பேச்சாளர் அருணாராஜேந்திரன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில், வரும்

15ம் தேதி தஞ்சையில் தமாகா சார்பில் நடைபெறும் காமராஜ் பிறந்தநாள் விழாவிற்கு திருத்துறைப்பூண்டி சட்ட மன்ற தொகுதியிலிருந்து 5 ஆயிரம் பேர் கலந்து கொள்வது. ஹெல்மெட் அணிவதன் காலஅவகாசத்தை நீட்டித்துதர வேண்டும். ஹெல்மெட்டை தமிழக அரசு குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டும். நகர பகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளை செப்பனிட வேண்டும். பள்ளி மாணவர்களின் நலன் கருதி காலை, மாலை நேரங்களில் கூடுதல் பஸ் இயக்கவேண்டும். காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டது.

**மரவள்ளி கிழங்கு பயிரில் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை வேளாண் அதிகாரி வழிகாட்டல்**

தோகைமலை, : மரவள்ளி கிழங்கு பயிரில் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து தோட்டக்கலை துறை அதிகாரி விளக்களித்துள்ளார்.

இது குறித்து தோகைமலை தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்திருப்பதாவது: தோகைமலை பகுதி விவசாயிகள் மரவள்ளி கிழங்கு சாகுபடியில் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதில் மரவள்ளியில் மஞ்சள் தேமல் நோய் பெருமளவில் பரவி வருவதால் விளைச்சல் குறைந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தும் நிலை உள்ளது. மரவள்ளியில் தோன்றும் தேமல் நோய் ஜெமினி வைரஸ் எனப்படும் ஒரு வகை நச்சுயிரியால் உண்டாகிறது. இந்த நச்சுயிரியால் சுமார் 80 சதவீதம் வரை விளைச்சல் இழப்பு ஏற்படும். இந்த நோயால் இலையின் மேற்பரப்பில் மஞ்சள் நிறப் பகுதிகளும், பச்சைநிற பகுதிகளும் உண்டாகி தேமல் போன்ற தோற்றத்தை அளிக்கும். இந்த நோய் தாக்குதல் அதிகமாகும் பொழுது இலைகள் வடிவமிழந்து குறுகி, சிறுத்து சுருங்கி, உருமாறி தோற்றமளிக்கும். இந்த நோய் ஒரு செடியில் இருந்து மற்றொரு செடிக்கு

வெள்ளை ஈ என்ற பூச்சிகளால் பரவுகிறது. அதுவும் கோடைக்காலங்களில் இவ்வகை வெள்ளை ஈக் கள் சுறுசுறுப்பாக இயங்குவதால் இந்நோய் தாக்கம் அதி கமாக தென்படும். நோய் கண்ட செடிகளின் இலைகளிலிருந்து வெள்ளை ஈக்கள் இலைச் சாற்றை உறிஞ்சும் போது நச்சுயிரியின் துணுக்கள் ஈக்களின் உறிஞ்சு குழலில் ஒட்டிக்கொண்டு, பின்பு அதே ஈக்கள் நோயற்ற ஆரோக்கியமான செடிகளுக்கு சென்று இலைச்சாற்றை உறிஞ்சும் போது அந்த செடிகளுக்கும் நோய் பரவுகிறது.

இந்த வகை நோயை கட்டுப்படுத்த நோய் தாக்காத ஆரோக்கியமான விதை குச்சிகளை கவனமாக தேர்வு செய்து பயன் படுத்த வேண்டும். நோய் தாக்கிய செடிகளை அவ்வப்போது அகற்றி எரித்து வயலை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். தானே முளைத்து வளரும் மரவள்ளிச் செடிகள் இந்நோயை உண்டாக்கும் கிருமிக்கு, அடைக்கலம் அளித்து நோய் பரவக் காரணமாவதால் அவற்றை அழித்து விடவேண்டும். வரப்புகளில் வளரும் செடிகளையும் அகற்ற வேண்டும். மேலும் அறுவடைக்குப் பின் மரவள்ளியின் எஞ்சிய பாகங்களான வேர், சிறு கிழங்குகள், குச்சிகள் ஆகியவற்றை முழுவதும் அகற்றி விடவேண்டும். வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த ஊடுருவிப் பாயும் பூச்சிக் கொல்லி மருந்துகளான மீதைல் டெமட்டான் அல்லது டைமித்தோயேட் போன்றவற்றை தெளித்து வயலில் வெள்ளை ஈக்கள் பரவுவதை கட்டுப்படுத்தலாம். மேலும் ஏக்கருக்கு 5 என்ற அளவில் மஞ்சள் நிற ஒட்டுப் பொறி வைத்து வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.